புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 PRGI.No.PNTAM/26/A7529 GSTIN: 33KXSPK6994Q1ZX

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor F1 ,7th Street, Nehru Colony, Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com
ஆசிரியர்: K.சபியுல்லா

மலர்: 02 | இதழ்: 99 | 14-10-2026 | புதன் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி
Volum 02 | Issue: 99 | 14-10-2026 | Wednesday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry

## ஆந்திரா சென்றடைந்த முதல்அமைச்சர் விஜய்க்கு உற்சாக வரவேற்பு...



சென்னை, அக்.14–
தமிழக முதல் அமைச்சராக விஜய் பதவியேற்ற பிறகு, முதல் முறையாக ஆந்திர முதல் மந்திரி சந்திரபாபு நாயுடுவை சந்திப்பதற்காக நேற்று விஜயவாடா சென்றார். இதற்காக மதியம் 2.30 மணிக்கு சென்னை நீலாங்கரையில் உள்ள தனது இல்லத்தில் இருந்து காரில் புறப்பட்ட முதல் அமைச்சர் விஜய், சென்னை விமான நிலையத்தில் இருந்து தனி விமானம் மூலம் ஆந்திரா புறப்படார். பிற்பகல் 3.45 மணிக்கு விஜயவாடா சென்றடைந்த முதல்அமைச்சர் விஜய்க்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அவரை காண்பதற்காக மக்கள் அதிகம் பேர் விமான நிலையம் அருகே வந்திருந்தனர். விஜயவாடா விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட முதல் அமைச்சர் ஜோசப் விஜய், அங்கிருந்து 30.5 கி.மீ. தொலைவில் உள்ள கனக துர்கா கோவிலுக்கு காரில் சென்றார். . மாலை 4.55 மணிக்கு கோவிலுக்கு செல்லும் அவர், மாலை 5 மணி முதல் 5.45 மணி வரை நடைபெறும் சிறப்பு பூஜையில் கலந்து கொண்டு அம்மனை தரிசித்தார். பின்னர், அங்கிருந்து மாலை 5.45 மணிக்கு காரில் புறப்படும் அவர் மாலை 6 மணிக்கு ஆந்திர முதல் மந்திரி சந்திரபாபு நாயுடு இல்லத்தை அடைந்தார். ஒரு மணி நேரம் அங்கிருக்கும் முதல் அமைச்சர் விஜய், கோதாவரி காவிரி ஆறு இணைப்புத் திட்டம் மற்றும் கிருஷ்ணா நீரை திறந்துவிடுவது குறித்து அம்மாநில முதல்மந்திரி சந்திரபாபு நாயுடுவுடன் பேசுகிறார்.

# 6 அதிமுக எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமாவை ஏற்றது செல்லும்: சென்னை ஐகோர்ட்டு உத்தரவு...



சென்னை: அக்.14–
அதிமுக 6 எம்எல்ஏக்களின் ராஜினாமாக்களை சபாநாயகர் ஏற்றுக்கொண்டது அரசியலமைப்புச் சட்டப்படி செல்லும் என்று தீர்ப்பளித்த சென்னை உயர் நீதிமன்றம், சபாநாயகர் உத்தரவுக்கு எதிரான வழக்குகளை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

தகுதி நீக்க நடவடிக்கை நிலுவையில் இருந்தபோது, ராஜினாமாவை ஏற்று சபாநாயகர் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என அதிமுக கொறடா அக்ரிகிருஷ்ணமூர்த்தி, தேசிய மக்கள் சக்தி கட்சித் தலைவர் எம்.எல் ரவி ஆகியோர் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கில் தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி, நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வு இன்று இறுதி தீர்ப்பு அறிவித்தது. அதன்படி, சம்பந்தப்பட்ட 6 எம்எல்ஏக்களின் ராஜினாமாக்களை சபாநாயகர் ஏற்றுக்கொண்டது அரசியலமைப்புச் சட்டப்படி செல்லும் என்றும், மேலும், சபாநாயகர் ஏற்றுக்கொண்ட நடவடிக்கையில் நீதிமன்றம் தலையிட முடியாது எனவும் நீதிபதிகள் கூறினர்.

மேலும், சம்பந்தப்பட்ட 6 பேருக்கும் எதிராக அரசியலமைப்பின் கீழ் தொடங்கப்பட்ட தகுதி நீக்க நடவடிக்கைகளை சபாநாயகர் 2 மாதங்களுக்குள் முடிக்க உத்தரவிட்ட நீதிபதிகள், அக்ரி கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டோர் தாக்கல் செய்த மனுக்களை தள்ளுபடி செய்தும் உத்தரவிட்டனர்.

# “பள்ளிகளில் இனி வாரத்தில் 5 நாட்களும் உடற்கல்வி வகுப்புகள் நடத்தப்படும்”

## அமைச்சர் ராஜ்மோகன் அறிவிப்பு



சென்னை: அக்.14–
“பள்ளிகளில் இனி வாரத்தில் 5 நாட்களும் உடற்கல்வி வகுப்புகள் நடத்தப்படும்” என பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் அறிவித்தார். இதற்காக, தமிழக அரசின் மாநில பாடத்திட்டத்தில் பயிலும் மாணவர்களுக்கான திருத்திய கால அட்டவணையை அமைச்சர் ராஜ்மோகன் வெளியிட்டார்.

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் ராஜ்மோகன், “இனி வாரத்தில் 5 நாட்களும் உடற்கல்வி வகுப்புகளை நடத்தப்படும். அதற்கு வழிவகை செய்யும் திருத்திய கால அட்டவணை வெளியிடுகிறோம். இனி தினந்தோறும் மாணவர்களுக்கு உடற்கல்வி வகுப்புகள் நடத்தப்படும். உடற்கல்வி வகுப்புகளைக் காட்டாயமாக ஒதுக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் அந்த வகுப்புகளை நிறுத்தக்கூடாது.

மாணவர்கள் உடற்பயிற்சி வகுப்புக்குச் செல்ல ஆசிரியர்கள் ஊக்குவிக்க வேண்டும். அதற்கான மைதானங்கள், பயிற்சி, விளையாட்டு உபகரணங்களை ஏற்பாடு செய்ய வேண்டும். 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உடற்கல்வி ஆசிரியர் காலிப் பணியிடங்கள் உள்ளன. அதில் 2 ஆயிரம் பணியிடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டுள்ளதாக நான் கண்டறிந்தேன்.

ஒரு உடற்கல்வி ஆசிரியர் காலிப்பணியிடம்கூட இருக்கக்கூடாது என நான் உத்தரவிட்டுள்ளேன். அதற்கான பணிகள் நடந்து வருகின்றன. திருத்திய கால அட்டவணை மூலம் மாணவர்களுக்கு தினமும் உடற்கல்வி வகுப்புகள் கிடைத்துள்ளது. சாதி, மதம், நிறம், விளையாட்டு திறன், உயரம், குள்ளம் என எதற்காகவும், எந்தக் குழந்தையையும் விளையாட்டில் இருந்து ஒதுக்கி வைக்காதீர்கள்” என்று அமைச்சர் தெரிவித்தார்.



ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுக்கூட்டம், குழு தலைவர் / ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி இ.ஆ.ப., இணைத்தலைவர்/திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன், ஈரோடு மாநகராட்சி மேயர் சு.நாகரத்தினம் சுப்பிரமணியம், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) செந்தில்குமரன் உட்பட பலர் உள்ளனர்.

# இந்திய–இலங்கை மீனவர்கள் பேச்சு நடத்த மத்திய மீன்வளத் துறை செயலரிடம் கோரிக்கை



ராமேசுவரம்: அக்14–
மத்திய மீன்வளத் துறை செயலாளர் அபிலாக்ஷ் லிக்கியிடம் தேசிய பாரம்பரிய மீனவர்கள் கூட்டமைப்பு சார்பாக இந்திய இலங்கை மீனவர்கள் பேச்சுவார்த்தை நடத்த கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

மத்திய மீன்வளத்து றை செயலாளர் அபிலாக்ஷ் லிக்கியிடம் தேசிய பாரம்பரிய மீனவர்கள் கூட்டமைப்பு சார்பின் தலைவர் நல்லதம்பி வழங்கிய கடிதத்தில், “இந்திய அரசு தமிழகத்துக்குச் சொந்தமான கச்சதீவை 1974ம் ஆண்டு இலங்கைக்கு கொடுத்தது. இதனால் கடந்த 52 வருடங்களாக தமிழக மீனவர்கள் துன்பத்தை மட்டுமே அனுபவித்து வருகிறோம்.

இதுவரை சுமார் 560க்கும் மேற்பட்ட இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையால் கொல்லப்பட்டுள்ளார்கள். பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள மீனவர்களின் உடைமைகள் அழிக்கப்பட்டுள்ளன.

இவற்றுக்குத் தீர்வு காணும் பொருட்டு இந்திய இலங்கை மீனவர்கள் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வந்தன. ஆனால், கடந்த 2016ம் ஆண்டு முதல் இந்திய இலங்கை மீனவர்கள் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவில்லை. மேலும், கடந்த செப்டம்பர் 25ம் தேதி நடைபெறுவதாக இருந்த இரு நாட்டு அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுவார்த்தையும் தடைபட்டுள்ளது.

எனவே, மத்திய அரசு இந்திய இலங்கை மீனவர்கள் பேச்சுவார்த்தை உடனடியாக நடத்த ஆவன செய்ய வேண்டும். இரு நாட்டு அதிகாரிகள் மட்டத்திலான குழுவில் இந்திய இலங்கை பாரம்பரிய மீனவர்களையும் உறுப்பினராக சேர்த்துக் கொள்ள வேண்டும். பாக் நீரணை இந்திய இலங்கை நாடுகளுக்கு இடையிலான குறுகிய கடல் பகுதி ஆக இருப்பதால், பாக் நீரணை கடல் பகுதிகளுக்கு பிரத்தியோக மீன்பிடி அறிவிப்பாணையை உருவாக்க வேண்டும்” என்று கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

# ஈரோடு மாவட்டத்திற்கு திமுக ஆட்சி காலத்தில் கொண்டுவரப்பட்ட திட்டங்கள்.. நல்ல திட்டங்களை கிடப்பில் போட்டுள்ள தவெக அரசு..

## ஈரோடு திமுக எம் பி கே. இ பிரகாஷ் கடும் குற்றச்சாட்டு..




ஈரோடு அக். 14
திமுக ஆட்சி காலத்தில் ஈரோடு மாவட்டத்தில் கொண்டுவரப்பட்ட பல்வேறு நல்ல திட்டங்களை இன்றைய ஆட்சியாளர்கள் செயல்படுத்தாமல், முடக்கி வைத்துள்ளதாக ஈரோடு திமுக எம் பி, கே இ பிரகாஷ் குற்றம் சாட்டியுள்ளார்.

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழு கூட்டம் நேற்று நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு கண்காணிப்பு குழு தலைவரும், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினருமான கே இ பிரகாஷ் திட்டப்பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இந்த கூட்டத்தில் திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் க. சுப்பராயன், ஈரோடு மாவட்ட ஆட்சியர் ச. கந்தசாமி, வருவாய் அலுவலர் சாந்தகுமார், ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்று அதிகாரிகளுடன் திட்டப் பணிகள் குறித்து ஆய்வு செய்து ஆலோசனை நடத்தினர்.

அதன் பிறகு செய்தியாளர்களை சந்தித்த ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக்குழு தலைவருமான கே இ பிரகாஷ்.. செய்தியாளர்களின் தெரிவித்ததாவது.

தற்போது நடைபெற்று வரும் அரசின் செயல்பாடுகள் என்பது முற்றிலும் முடங்கிப் போய் உள்ளது. நிர்வாக சீர்கேடு உள்ள நிலையில் குடிநீர் பிரச்சினை, மின் வெட்டு பிரச்சினை என்பது அதிக அளவில் உள்ளது. நேற்று முன்தினம் கூட சென்னை தலைமைச் செயலகத்தில் மின்வெட்டு ஏற்பட்டு சுமார் ஒரு மணி நேரம் அமைச்சர்களும், அதிகாரிகளும் இருட்டில் அமர்ந்திருந்த சூழ்நிலை உள்ளது.

ஈரோடு மாவட்டத்தை பொருத்தவரை திமுக ஆட்சி காலத்தில் மக்களுக்கான பல்வேறு திட்டப் பணிகள் கொண்டுவரப்பட்டு அதனை சிறப்பான முறையில் செயல்படுத்தி வந்தோம்.

தற்போது வந்துள்ள இந்த புதிய அரசு திமுக ஆட்சி காலத்தில் கொண்டு வந்த நல்ல திட்டங்களை எல்லாம் தொடர்ந்து செயல்படுத்தாமல் முடக்கி விட்டது. ஆனால் செட்டப்பணிகள் முடக்கப்பட்டு பொதுமக்கள் பாதிப்பு அடைகின்றனர்.

மக்களுக்கான பணிகளில் அரசியல் பார்ப்பது அநாகரீகமானது. அரசு அதுபோன்றஒருநிலைப்பாட்டை தான் எடுத்துள்ளது.

ஈரோடு மாவட்டத்தை பொருத்தவரை சாலை கட்டமைப்பு மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இதனால் பொதுமக்களின் பொது போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. குடிநீர் பிரச்சனையும் தலைதூக்கி உள்ளது. அதற்கு தீர்வு காணும் வகையில் குடிநீர் பிரச்சனையை தீர்க்க இந்த அரசு திமுக ஆட்சி காலத்தில் கொண்டு வந்த திட்டங்களை அரசியல் நோக்கத்தோடு செயல்படுத்தாமல் உள்ளது. குடிநீர், சாலை உள்கட்டமைப்பு, உள்ளிட்ட மக்களுக்கான பல்வேறு திட்டங்களில் அரசியல் பாகுபாடு பார்க்காமல் புதிய அரசை செயல்பட வேண்டும்.

இவ்வாறு ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே. இ பிரகாஷ் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்த செய்தியாளர் சந்திப்பின்போது ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் உடன் இருந்தார்.

# கோவையில் விதைகள் அறக்கட்டளை சார்பில் நலத்திட்ட உதவிகள் மற்றும் இலவச மருத்துவ முகாம்! மாணவர்கள், மாற்றுத்திறனாளிகள், முதியவர்கள் உள்ளிட்டோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கல்!




கோவை: அக்.14–

கோயம்புத்தூர் செல்வபுரம் சக்தி திருமண மண்டபத்தில், விதைகள் அறக்கட்டளை மற்றும் ஆரம்பம் மலர் பத்திரிகை சார்பில், ஏழை எளிய மக்கள், மாணவ, மாணவியர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

இந்த விழாவில் பயனாளிகளுக்கு புத்தகப்பைகள், வேஷ்டி, சட்டை, சேலை மற்றும் அரிசி உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. மேலும், வாசன் கண் மருத்துவமனை சார்பில் இலவச கண் பரிசோதனை மற்றும் மருத்துவப் பரிசோதனை முகாம் நடைபெற்றது. இதில் அப்பகுதியைச் சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர். விழாவின் நிறைவாக அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. விதைகள் அறக்கட்டளையின் நிறுவனரும் தலைமை அறங்காவலருமான ஜி. மூர்த்தி, தலைவர் எஸ்.கே. காளிராஜ், செயலாளர் பிரகாஷ், பொருளாளர் மாரியப்பன் மற்றும் நிர்வாகிகள் வாசு, கோபி, ஆனந்தகுமார், ராஜா, நாகராஜ், சசிகுமார் உள்ளிட்டோர் விழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

மேலும், சிநேகராம் மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனைத் தலைவர் டாக்டர் விசுவநாதன், மெடிக்கல் யூ. நாராயணன், சிவசக்தி சேவை அறக்கட்டளைத் தலைவர் தங்கராஜ், ஸ்ரீ முத்துக்குமரன் ட்ரேடர்ஸ் தலைவர் செந்தில் கணேஷ் உள்ளிட்ட சிறப்பு விருந்தினர்கள் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

அப்போது, மரக்கன்றுகளை நட்டு அவற்றைப் பராமரிப்பதன் அவசியம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சமூகப் பொறுப்பு குறித்து பொதுமக்களுக்கும் மாணவ, மாணவியருக்கும் எடுத்துரைக்கப்பட்டது.

பல்வேறு தரப்பினருக்கும் நலத்திட்ட உதவிகளை வழங்கி, இலவச மருத்துவச் சேவையையும் ஏற்படுத்திய இந்த விழா சிறப்பாக நடைபெற்றது. விதைகள் அறக்கட்டளையின் சமூகநலப் பணிகள் தொடர்ந்து சிறக்க வேண்டும் என நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் வாழ்த்துத் தெரிவித்தனர்.



ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம், அயலுலூர் ஊராட்சி, செம்மாண்டம் பாளையம் பகுதியில் புதிய நியாய விலைக் கடையினை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் .கே.ஏ.செங்கோட்டையன் அவர்கள் திறந்து வைத்து, குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்கினார். உடன் கோபிசெட்டிபாளையம் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.சிந்துஜா, கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் ப.கந்தராஜா உட்பட பலர் உள்ளனர்

# டெல்லியில் தலைமை தேர்தல் ஆணையர் பதவி விலகக் கூறி போராடிய தலைவர்கள் மாணவர்களை கைது செய்ததை கண்டித்து சி.பி.ஐ.சி.பி.எம் கண்டன ஆர்ப்பாட்டம்




மணப்பாறைஅக் 14

மணப்பாறை கோவில்பட்டி சாலையில் உள்ள காமராஜர் சிலை அருகில் டெல்லி ஜந்தர் மந்தர் பகுதியில் மாணவர்கள் இளைஞர்கள் தேர்தல் தலைமை ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலகக் கூறி நடைபெற்று வருகின்ற போராட்டத்தில் பங்கேற்ற இடதுசாரி தலைவர்களை மாணவர்களை கைது செய்ததை கண்டித்து சி.பி.ஐ,சி.பி.எம் கட்சிகள் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

இவ் ஆர்ப்பாட்டத்திற்கு சிபிஐ நகர துணை செயலாளர் த. திருநாவுக்கரசு .சிபிஎம். வட்ட செயலாளர் கோபாலகிருஷ்ணன் ஆகியோர் தலைமை வகித்தனர்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வடக்கு ஒன்றிய துணை செயலாளர் சத்திரை பெருமாள், மருங்காபுரி ஒன்றிய துணைச் செயலாளர் கோவிந்தராஜ்,தெற்கு ஒன்றிய செயலாளர் ராஜேந்திரன், ஏ ஐ டி யு சி மாவட்ட தலைவர் தீரன்மணி, புறநகர் மாவட்ட பொருளாளர் ஜனசக்திஉசேன் சிபிஎம் வட்டகுழுஉறுப்பினர்கள் ஆட்டோசுரேஷ், சீனிவாசன், நவமணி,வையம்பட்டி ஒன்றிய செயலாளர்

வெள்ளைச்சாமி, மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் சிதம்பரம் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினார்கள் அனைவருக்கும் சிபிஎம் அப்துல்மாலிக் நன்றி கூறினார் சி பி எம் சி பி ஐ நகர ஒன்றிய மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்று கண்டன முழக்கம் விட்டனர்




கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக நடைபெற்ற, மாற்றுத்திறனாளிகளுக்கான குறை தீர்க்கும் நாள் முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் இ.ஆ.ப., அவர்கள் மாற்றுத்திறனாளிகளிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். உடன் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலர் முருகேசன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# சேலத்தில் ஒப்பந்ததாரரை அலறவிட்ட தவெக எம்எல்ஏ எம்எல்ஏ'வை மீறி என்ன வெங்காயத்துக்கு செய்யறீங்க?

சேலம் மாநகராட்சி மூக்கனேரி பகுதியில், தனியார் நிறுவனம் சார்பில் நடந்து வரும் கட்டுமானப் பணியின் போது, கழிவுநீர் கால்வாயின் மேல் பகுதியில் சிமெண்ட் ஸ்லாப் அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து சேலம் வடக்கு தொகுதி த.வெ.க.



எம்.எல்.ஏ., சிவக்குமார் ஒப்பந்ததாரரிடம் கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்ட சம்பவம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. ஏரியில் இருந்து வெளியேறும் உபரிநீர் குடியிருப்புப் பகுதிக்குள் நுழைவதைத் தடுக்கும் வகையிலும், பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் கால்வாயில் தவறி விழுந்து விபத்துக்குள்ளாகாமல் பாதுகாக்கும் நோக்கத்துடனும் இந்த ஸ்லாப் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

ஆனால், அங்கு ஆய்வு செய்யச் சென்ற எம்.எல்.ஏ., சிவக்குமார் அப்பணிகளைத் தடுத்து நிறுத்த முயன்றதுடன், ஊழியர்களையும் ஒப்பந்ததாரரையும் தரக்குறைவான வார்த்தைகளால் திட்டியும், "நான் நினைத்தால் உங்களைச் சிறைக்கு அனுப்பிவிடுவேன்" என மிரட்டல் விடுத்ததாகவும் கூறப்படும் வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. மக்களின் பாதுகாப்பைக் கருதியே ஸ்லாப் அமைக்கப்படுவதாக அப்பகுதி மக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், ஒரு மக்கள் பிரதிநிதியின் இந்த அதிகாரப் போக்கு மற்றும் மிரட்டல் செயல் பொதுமக்களிடையே அதிர்ச்சியையும் கண்டனங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

# ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் பிறந்த 3 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கல்



ஊத்தங்கரை: அக்.14–

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் பிறந்த 3 குழந்தைகளுக்கு 'தாய்மாமன் தங்க மோதிரம்' திட்டத்தின் கீழ் தங்க மோதிரங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ஊத்தங்கரை அரசு மருத்துவமனை முதன்மை மருத்துவ அலுவலர் டாக்டர் சதீஷ் தலைமை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக ஊத்தங்கரை சட்டப்பேரவை உறுப்பினர் டாக்டர் ந. இளையராஜா கலந்து கொண்டு, பிறந்த 3 குழந்தைகளுக்கும் தலா ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கி வாழ்த்தினார்.

நிகழ்ச்சியில் ராஜா, சசிதானந்தம், தேவிகா, விஜயகுமார், ரமேஷ், சித்திக் உள்ளிட்ட மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனை நிர்வாகிகள் கலந்து கொண்டனர். மேலும், கட்சியின் மாவட்ட, ஒன்றிய, நகர மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.

# தமிழக ஹையர் கூட்ஸ் ஓனர் அசோசியேசன் கோவை மாவட்டம் சார்பில் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கும் விழா



கோவை. அக்.14–

தமிழக ஹையர் கூட்ஸ் ஓனர் அசோசியேசன் கோவை மாவட்டம் சார்பில் மாநில பொதுச்செயலாளர் D.மணிமாறன் அவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. கோவை துடியலூர் தனியார் திருமண அரங்கில் நடைபெற்றது.இதில் தமிழக அரசுக்கு கோரிக்கையாக ஜிஎஸ்டி யில் சலுகை வேண்டுமென்று கடந்த ஆட்சியாளர்களிடம் மனு கொடுத்ததாகவும் அதே போல் தற்பொழுது உள்ள அரசிடம் கோரிக்கை மனு தருவதாகவும் அதனை நிறைவேற்றி தரகேட்டுக் கொள்வதாகவும் தெரிவித்தனர்.

இதில் கோவை மாவட்ட தலைவர் தங்கவேல்,மாவட்ட செயலாளர் நந்தகோபால்,மாவட்ட பொருளாளர் மகாலிங்கம், வடக்கு பகுதி தலைவர் ரமேஷ், பொருளாளர் மணி,பொள்ளாச்சி தாலுகா தலைவர் கணேஷ், காரமடை தாலுகா தலைவர் சி வி துரைசாமி,கிணத்துக்கடை தாலுகா தலைவர் கனகராஜ், கிழக்கு பகுதி சூலூர் சசி,மத்திய பகுதி கருணாகரன்,மேற்கு பகுதி தலைவர் மணிஷ்,தெற்கு பகுதி தலைவர் ராமகிருஷ்ணன்,மற்றும் பகுதி நிர்வாகிகள் கிளை நிர்வாகிகள் தாலுகா நிர்வாகிகள்,மற்றும் உறுப்பினர்கள் 1000 கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர்.

# முத்தூட் கலைவாணி மழலையர் பள்ளியில் நடைபெற்ற ஓவியப் போட்டி: ஏராளமான மாணவர்கள் பங்கேற்பு..!




வந்தவாசி, அக் 14:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தெய்யார் முத்தூட் கலைவாணி மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளியில் மாணவர்களுக்கான ஓவியப் போட்டிகள் நடைபெற்றன. இந்த நிகழ்விற்கு பள்ளி முதல்வர் பி. புவனேஸ்வரி தலைமை தாங்கினார். நிர்வாக அலுவலர் அருண் தங்கம் முன்னிலை வகித்தார்.

தெய்யார் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவர்கள் ஏராளமானோர் ஓவியப் போட்டிகளில் சிறப்பிடம் பெற்றனர். பங்கேற்ற அனைவருக்கும் சான்றிதழ்கள் மற்றும் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் விருதுகள் வழங்கப்பட்டது. இந்த ஓவியப் போட்டியை ஓவிய ஆசிரியர்கள் கலைச் சுடர்மணி பெ.பார்த்திபன், ரமேஷ் ஆகியோர் நடத்தினர். இந்த நிகழ்வில் பெற்றோர்கள் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் பலரும் பங்கேற்றனர்.

# விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த ஆலம்பூண்டி பகுதியில் வீட்டில் தூங்கி இருந்த குழந்தை காணவில்லை



செஞ்சி. அக்.14–

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி தாலுக்கா ஆலம்பூண்டி ஊராட்சி, நடுப்பட்டு கிராமத்தை சேர்ந்தவர்கள் வடிவேல் பவானி தம்பதியினர். இவர்களுக்கு இரண்டு மகள்கள் உள்ளனர். மூத்த மகள் விஜி சென்னையில் டிப்ளமோ படித்து வருகிறார். இரண்டாவது மகள் ஹேமாவதி (வயது 7). இவர் ஆலம்பூண்டியில் உள்ள அரசு பள்ளியில் 2ம் வகுப்பு படித்து வருகிறார்.

இந்நிலையில் நேற்று இரவு பெற்றோர்கள் தங்கள் இளைய மகள் ஹேமாவதிக்கு வீட்டில் பிறந்தநாள் விழா கொண்டாடியுள்ளனர். விழா முடிந்து இரவு பெற்றோருடன் ஹேமா வதி தூங்கியுள்ளார்.

நேற்று அதிகாலை பெற்றோர் எழுந்து பார்த்தபோது, மகள் ஹேமாவதியை காணவில்லை என்பதை அறிந்து அதிர்ச்சி அடைந்தனர். உறவினர்கள் வீடு மற்றும் கிராமத்தின் பல்வேறு பகுதிகளில் தேடியும் குழந்தை கிடைக்க வில்லை.

இதையடுத்து பெற்றோர் சத்திய மங்கலம் காவல் நிலையத் தில் புகார் அளித்தனர். புகாரின் பேரில் சத்தியமங்கலம் காவல் ஆய்வாளர் சுரேஷ் பாபு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மதிவாணனுக்கு தகவல் தெரிவித்தார்.

தகவல் அறிந்ததும் மாவட்ட எஸ்.பி. மதிவாணன் சம்பவ இடத்திற்கு நேரில் விரைந்து சென்று விசாரணை மேற்கொண்டார். சிறுமியை கண்டுபிடிக்க 5 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் ட்ரோன் கேமரா உதவியுடனும், மோப்பநாய் வரவழைக்கப்பட்டும் கிராமத்தை சுற்றியுள்ள பகுதிகள், புதர் மற்றும் கிணற்று பகுதிகளில் தீவிர தேடுதல் பணி நடைபெற்று வருகிறது. இதற்காக சுமார் 100க்கும் மேற்பட்ட போலீசார் கிராமத்தில் குவிக்கப்பட்டுள்ளனர்.

பிறந்தநாள் கொண்டாடிவிட்டு இரவு தூங்கிய பள்ளி சிறுமி அதிகாலையில் மாயமான சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பையும், சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை சார்பாக போதைபொருள் தடுப்பு, கள்ளச்சாராயம் ஒழிப்பு மற்றும் சட்ட விரோத மதுவிற்பனை தடுப்பு குறித்த ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.தினேஷ் குமார் இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி.கோ.சி.அனிதா, மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர் மரு.செந்தில் குமார் மற்றும் காவல்துறை, ஊரக வளர்ச்சித்துறை, வனத்துறை உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

# வையம்பட்டியில் 100 நாள் வேலைத் திட்டக் கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம்!

## அடுத்த வாரம் வேலை வழங்கப்படும்; நிலுவைச் சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் உறுதி




வையம்பட்டி, அக். 14:
திருச்சி மாவட்டம், வையம்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) மற்றும் அனைத்திந்திய விவசாய கிராமப்புற தொழிலாளர் சங்கத்தின் வையம்பட்டி ஒன்றியக் குழு சார்பில், 100 நாள் வேலைத் திட்டக் கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தோழர் ராமாயி தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், ஒன்றியக் குழு உறுப்பினர்கள் தோழர்கள் வசந்தா, காளியம்மாள், வெள்ளையம்மாள், சீதா, சந்திரா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

**ஆண்டு முழுவதும் வேலை வழங்கக் கோரிக்கை!**

100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் ஆண்டு முழுவதும் தொடர்ந்து வேலை வழங்க வேண்டும், ஆறு மாதங்களுக்கு முன்பு வேலை செய்த தொழிலாளர்களுக்கு இதுவரை வழங்கப்படாத நிலுவைச் சம்பளத்தை உடனடியாக வழங்க வேண்டும், கிராமப்புறத் தொழிலாளர்களின் குடியிருப்பிலிருந்து இரண்டு கிலோமீட்டர் சுற்றளவுக்குள் வேலை வழங்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தப் போராட்டம் நடைபெற்றது.

கோரிக்கைகளை வலியுறுத்தி காத்திருப்புப் போராட்டம் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த நிலையில், வட்டார வளர்ச்சி அலுவலர் போராட்டம் நடைபெற்ற இடத்திற்கு நேரில் வந்து தொழிலாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். இதனைத் தொடர்ந்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**அதிகாரிகள் உறுதியளித்ததால் போராட்டம் முடிவு!**

போராட்டத்திற்குப் பின்னர், வட்டார வளர்ச்சி அலுவலரைச் சந்தித்து தொழிலாளர்களின் கோரிக்கைகள் குறித்து நிர்வாகிகள் பேசினர். அப்போது, அடுத்த வாரத்திற்குள் அனைவருக்கும் வேலை வழங்குவதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், நிலுவைச் சம்பளம் வழங்குவதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் அடுத்த வாரம் சம்பளம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

மேலும், தொழிலாளர்கள் வசிக்கும் கிராமங்களுக்கு அருகிலேயே 100 நாள் வேலை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்டது. அதிகாரிகளின் இந்த உறுதிமொழியைத் தொடர்ந்து போராட்டம் முடிவுக்கு வந்தது.

**நிர்வாகிகள் பங்கேற்பு!**

இந்த ஆர்ப்பாட்டத்தில், கட்சியின் நகரச் செயலாளர் பி. பாலு, மாவட்டக் குழு உறுப்பினர்கள் தோழர்கள் கருப்பையா, தங்கராஜ், ஆவா. இளையராஜா, ஜோதிபாசு மற்றும் கிராமப்புறத் தொழிலாளர்கள், பொதுமக்கள் என 70க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர்.

# IOV ஈரோடு கிளை சார்பில் மதிப்பீட்டாளர்கள் தின விழா

## மூத்த மதிப்பீட்டாளர்களுக்குச் சிறப்பு கௌரவம்



ஈரோடு. அக். 14
ஈரோடு: இந்திய மதிப்பீட்டாளர்கள் நிறுவனம் (Institution of Valuers – IOV), ஈரோடு கிளை சார்பில் மதிப்பீட்டாளர்கள் தின விழா, ஆண்டு பொதுக்குழுக் கூட்டம் (கிபிவி) மற்றும் மூத்த மதிப்பீட்டாளர்களைக் கௌரவிக்கும் விழா ஆகியவை ஈரோட்டில் நடைபெற்றது.

விழாவிற்கு IOV ஈரோடு கிளைத் தலைவர் பொறியாளர் பால் விஜயகுமார் தலைமை வகித்தார். கிளைச் செயலாளர் ஆர். செந்தாமரை மற்றும் பொருளாளர் எம்.கே. கந்தசாமி முன்னிலை வகித்தனர்.

மதிப்பீட்டுத் துறையில் நீண்டகால அனுபவமும் சிறப்பான பங்களிப்பும் கொண்ட மூத்த மதிப்பீட்டாளர்களான ஆர். மோகன் ராஜ், மணிகண்டன் மற்றும் சுந்தர்ராஜ் ஆகியோர் விழாவில் கௌரவிக்கப்பட்டனர். அவர்களின் தொழில் முறை அர்ப்பணிப்பு மற்றும் மதிப்பீட்டுத் துறைக்கான சேவைகள் பாராட்டப்பட்டன.

தொடர்ந்து நடைபெற்ற ஆண்டு பொதுக் குழுக் கூட்டத்தில் கிளையின் செயல்பாடுகள், வரவுசெலவு அறிக்கை மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன. மதிப்பீட்டாளர்களின் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துதல், தொழில்முறை ஒற்றுமையை வலுப்படுத்துதல் மற்றும் இளம் மதிப்பீட்டாளர்களுக்கு வழிகாட்டுதல் ஆகியவற்றின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் கிளையின் முன்னாள் தலைவர்கள் (Past Chairmen), நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர் மதிப்பீட்டாளர்கள் பலர் கலந்து கொண்டனர். விழா மதிப்பீட்டாளர்களிடையே ஒற்றுமையையும் ஒத்துழைப்பையும் வளர்க்கும் வகையில் அமைந்தது.

# கோவை மாவட்டம் பேரூர் அடுத்த பச்சா பாளையம் பகுதியில்,உலக சாதனை நிகழ்வு!



கோவை அக்:14
கோவை மாவட்டம் பி.கே.புதூர் பகுதியில், ஸ்ரீ ராமசாமி கல்வி மற்றும் சேவை அறக்கட்டளை மற்றும் எஸ்.ஆர்.எம் இன்ஸ்டிடியூட், எஜிகேஷனல் மற்றும் சாரிட்டபிள் ட்ரஸ்ட் என்ற அமைப்பு கடந்த 6 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. இந்த அறக்கட்டளை சார்பாக பல்வேறு பெண்களுக்கு சுய தொழில், மற்றும் சுய முன்னேற்ற பயிற்சிகள் இலவசமாக வழங்கபட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக கோவை பேரூர் அடுத்த பச்சா பாளையம் பகுதியில் மகளிர் வாழ்வாதாரத்திறன் மேம்பாடு மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் விழா தனியார் திருமண அரங்கில் நடைபெற்றது. டாக்டர் மகேஷ்வரி சிவபிரகாசம் ஒருங்கினைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் சுமார் 2000 த்திற்கும் மேற்பட்ட பெண்கள், கலந்து கொண்டனர்.

இதில் பயிற்சி பெற்ற 2000 மகளிர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன், 2000 பெண்கள் சுமார் 30 நிமிடங்களில் தங்களது திறமைகளை வெளிப்படுத்தி சாதனை பக்கங்களிலும் இடம்பிடித்தனர். இவர்களது திறனை ஆய்வு செய்த இன்டர்நேஷனல் வேர்ல்டு ரெக்கார்ட்ஸ் க்ரோனிக்கல் என்ற அமைப்பு இவர்களது சாதனையை ஏற்று சான்றிதழ்களும் வழங்கி பெருமை படுத்தியது. இதனை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்துப்பேசிய மகேஸ்வரி சிவபிரகாசம் கூறியதாவது,

சுய தொழில் முன்னேற்றத்திற்கான வழிகாட்டல் மற்றும் வருமான உயர்வு குறித்த சிறப்பு ஆலோசனைகள் இந்த முகாமில் கலந்து கொண்ட பெண்களுக்கு வழங்கப்பட்டதாகவும், மகளிர் தொழில் முனைவோர்களுக்கான அரசு நலத்திட்டங்கள் மற்றும் நிதி உதவி திட்டங்கள் குறித்து இங்கு கலந்து கொண்ட எடுத்துரைக்கப் பட்டதாகவும், 2000 மகளிர்களின் பிரம்மாண்ட உலக சாதனை நிகழ்வும், இந்த மேடையில் நடைபெற்றதாக தெரிவித்தார்.

மேலும் பெண்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு அவர்களின் திறன்களை அறிந்து, அவர்களுக்கு சுய தொழில் அல்லது சுய வேலைவாய்ப்பு சேவைகளை வழங்கும் திட்டங்களை எங்களது அமைப்பின் சார்பாக வழங்கி வருகின்றதாகவும் தெரிவித்தார். பெண்களின் முன்னேற்றத்திற்காக கடந்த 6 ஆண்டுகளாக பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகளை மகளிர்களுக்கு இலவசமாக வழங்கி வருகின்றதாகவும், இதில் தையல் பயிற்சி, ஆரி வேலைகள், டிசைன் வேலைகள், அழகு கலை பயிற்சிகள் உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகளும் இலவசமாகவே வழங்கி வருகின்றதாகவும் தெரிவித்தார்.

இங்கு நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், கடந்த மூன்று முதல் 6 மாத காலங்களில் 2000 மகளிர்கள் இத்தகைய பயிற்சிகளை முறையாக கற்று கொண்டுள்ளனர். அவர்கள் கற்று கொண்டதை உறுதி படுத்தும் வகையில், அவர்களுக்கு சான்றுகள் வழங்கபட்டது என்று தெரிவித்தார்.

# திருவள்ளூரில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம் இருந்து 501 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டன




திருவள்ளூர் அக் 14 : திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பல்நோக்கு கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் ச.கவிதா தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த பொதுமக்கள், தங்களது குறைகளை நிவர்த்தி செய்வது தொடர்பாகவும் பொது பிரச்சனைகள் தொடர்பாக உதவிகள் வேண்டியும் 501 மனுக்களை மாவட்ட ஆட்சியரிடம் வழங்கினர். இதில், நிலம் சம்பந்தமான 72 மனுக்களும், சமூக பாதுகாப்பு திட்டம் தொடர்பாக 45 மனுக்களும், வேலைவாய்ப்பு வேண்டி 25 மனுக்களும், பசுமை வீடு மற்றும் அடிப்படை வசதிகள் வேண்டி 35 மனுக்களும் மற்றும் இதர துறைகள் சார்பாக 324 மனுக்கள் என ஆக மொத்தம் 501 மனுக்கள் பெறப்பட்டன.

இம்மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு தகுதியுள்ள பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் சகவிதா அறிவுறுத்தினார். முன்னதாக, மாவட்ட ஆட்சியர் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடம் இருந்து மனுக்களை பெற்றுக்கொண்டு, உரிய தீர்வுகாண சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதில் மாவட்ட வருவாய் அலுவலர் கே.வி.ராஜ்குமார், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) வெங்கடேசன், கூடுதல் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) சாந்தமூர்த்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) வேல்முருகன், மாவட்ட வழங்கல் அலுவலர் முத்து திறனாளிகளின் நல அலுவலர் குமார் மற்றும் பல்துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அகில பாரத ஐயப்ப சேவா சங்க திருச்சி மாவட்ட யூனியன் செயற்குழு கூட்டம்

## சபரிமலை விழாக்கால அன்னதானம், சேவைகள் குறித்து ஆலோசனை



திருச்சி. அக் 14
அகில பாரத ஐயப்ப சேவா சங்க திருச்சி மாவட்ட யூனியனின் செயற்குழுக் கூட்டம் ஸ்ரீரங்கம் அம்மா மண்டபம் சாலையில் அமைந்துள்ள யோகா திருமண மண்டபத்தில், மாவட்டத் தலைவர் ரமேஷ் சாமி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் சபரிமலை விழாக் காலத்தை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய சேவைகள் மற்றும் மாவட்ட அமைப்பின் வளர்ச்சிப் பணிகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

சபரிமலை விழாக் காலத்தை முன்னிட்டு திருச்சி, ஸ்ரீரங்கம் மற்றும் சமயபுரம் ஆகிய பகுதிகளில் அன்னதான முகாம்கள் நடத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது. சபரிமலையில் சங்கத்தின் சார்பில் மேற்கொள்ளப்படும் சேவைகள் மற்றும் அன்னதானப் பணிகளுக்குத் தேவையான தொண்டர்களை அனுப்புவது, அன்னதானப் பொருட்களை அனுப்புவது குறித்து விவாதிக்கப்பட்டது.

விழாக்காலத்தில் திருச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளைச் சங்கங்களுக்கும் மாவட்ட நிர்வாகிகள் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, சேவைகள் மற்றும் பணிகளை ஆய்வு செய்வது குறித்து ஆலோசிக்கப்பட்டது. புதிதாகத் தொடங்கப்பட்ட இரண்டு கிளைகளுக்கும், செயல்படாமல் இருந்த பழைய கிளைகளைப் புதுப்பித்ததன் அடிப்படையிலும் பதிவு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

வருகிற 25.10.2026 அன்று ஸ்ரீரங்கம் அன்னதான முகாம் அமைப்பதற்கான பந்தக்கால் நடும் வைபவம் நடைபெறுவது குறித்து ஆலோசிக்கப்பட்டது. வருகிற 17.11.2026 கார்த்திகை முதல் நாளன்று ஸ்ரீரங்கம் முகாமைத் தொடங்குவது மற்றும் தொடக்க விழாவிற்குச் சிறப்பு விருந்தினர்களை அழைப்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

கூட்டத்தின் தொடக்கத்தில் மகளிர் அணி நிர்வாகி திருமதி ஜெயா இறைவணக்கம் செலுத்தினார். மாவட்டத் துணைத் தலைவர் முத்து வரவேற்புரை ஆற்றினார். தொடர்ந்து மாவட்டத் தலைவர் ரமேஷ் சாமி தலைமையுரை நிகழ்த்தினார். அதன்பின், அலுவலகச் செயலாளர் அம்சராம் கடந்த கூட்டத்தின் அறிக்கையை வாசித்தார். மாவட்ட இணைச் செயலாளர் தர்மலிங்கம் அவர்கள் கடந்த கூட்டத்திற்குப்பின் நடைபெற்ற மாவட்டச் செயல்பாடுகள் குறித்தும், இணைச் செயலாளர் சிதம்பரம் கிளைச் சங்கங்களின் செயல்பாடுகள் குறித்தும் அறிக்கைகளை வாசித்தனர். அவை கூட்டத்தில் ஒப்புதல் பெற்றன. தொடர்ந்து, மாவட்டக் கௌரவ தலைவர் குருசாமி சபரிதாசன் மற்றும் மாவட்டச் செயலாளர் ஸ்ரீதர் சிறப்புரையாற்றினர். கூட்டத்தில் பங்கேற்ற கிளைச் சங்க நிர்வாகிகள் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் தங்களது கருத்துகளையும் ஆலோசனைகளையும் பதிவு செய்தனர். மாவட்டப் பொருளாளர் சுரேஷ் கூட்டத்தை ஒருங்கிணைத்து நடத்தினார். இறுதியாக, மாவட்டத் தொண்டர் படை கண்காணிப்பாளர் புஷ்பராஜ் நன்றியுரை ஆற்றினார்.

# தஞ்சை அரசு ராசா மிராசுதார் மருத்துவமனையில் லஞ்ச ஒழிப்புத்துறை சோதனை

தஞ்சாவூர்: அக்.14–
தஞ்சை அரசு ராசா மிராசுதார் மருத்துவமனையில் நோயாளிகளிடம் காவலர்கள், தூய்மைப் பணியாளர்கள் பணம் கேட்பதாக எழுந்த புகாரைத் தொடர்ந்து லஞ்ச ஒழிப்புத்துறை சோதனையில் ஈடுபட்டனர். மருத்துவமனையில் ஆண் குழந்தை பிறந்தால் ரூ.1000, பெண் குழந்தை பிறந்தால் ரூ.500 பணம் கேட்பதாக புகார் எழுந்த நிலையில் அரசு மருத்துவமனையில் லஞ்ச ஒழிப்புத்துறை காவல்துறை சோதனை நடத்தியது. அரசு மருத்துவமனையில் லஞ்சம் வாங்கினால் நடவடிக்கை என அமைச்சர் அருண்ராஜ் எச்சரித்திருந்தார்

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...

# சேலத்தில் மனைவி பிரிந்த விரக்தியில் 1½ வயது குழந்தையுடன் ரயிலில் பாய்ந்து கூலித்தொழிலாளி தற்கொலை.

சேலம். அக்.14–
மனைவியுடன் மீண்டும் இணைந்து வாழ முடியாத மனவேதனையில், ஒன்றரை வயது ஆண் குழந்தையுடன் ரெயில் முன் பாய்ந்து வாலிபர் உயிரை மாய்த்துக்கொண்ட சம்பவம் சேலம் மாவட்டத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. சேலம் மாவட்டம், நெய்க்கார பட்டி பிள்ளையார் கோவில் வீதியைச் சேர்ந்தவர் விஜயகுமார் (27). கூலித்தொழிலாளியான இவருக்கு வித்தியா என்ற மனைவியும், ஒன்றரை வயதில் சாய் ரித்விக் என்ற ஆண் குழந்தையும் இருந்தனர். குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக, கடந்த 6 மாதங்களுக்கு முன்பு மனைவி தனது குழந்தை சாய் ரித்விக்குடன் கணவரைப் பிரிந்து தனியாகச் சென்றார்.

இதனால் விஜயகுமார் மன உளைச்சலில் இருந்து வந்ததாகத் தெரிகிறது. இதற்கிடையே, கடந்த ஒரு மாதத்துக்கு முன்பு வித்தியாவுடன் ஏற்பட்ட தகராறைத் தொடர்ந்து, குழந்தை சாய் ரித்விக்கை விஜயகுமார் தன்னுடன் அழைத்துச் சென்றார். பின்னர், ஆட்டையாம்பட்டியில் வசிக்கும் தனது தந்தை மற்றும் சகோதரிகளின் பராமரிப்பில் குழந்தையை ஒப்படைத்து விட்டுச் சென்றார். இந்த நிலையில், நேற்று முன்தினம் இரவு தனது சகோதரியிடம் இருந்து குழந்தையை அழைத்துக் கொண்டு விஜயகுமார் வெளியே சென்றார்.

அதன் பின்னர், மனைவி வித்தியாவுடன் சேர்ந்து வாழ முடியாத விரக்தியில் தற்கொலை செய்துகொள்ளப் போவதாகத் தனது சகோதரிக்கு கைப்பேசி வழியாகத் தகவல் அனுப்பினார். அத்துடன், தான் இருக்கும் இடத்தையும் அவருக்குத் தெரிவித்தார். தொடர்ந்து, மனைவி வித்தியாவையும் கைப்பேசியில் தொடர்பு கொண்ட விஜயகுமார், ரெயில் முன் பாய்ந்து உயிரை மாய்த்துக் கொள்ளப் போவதாகக் கூறியுள்ளார்.

இதனால் அதிர்ச்சியடைந்த குடும்பத்தினர் அவரைத் தொடர்பு கொள்ள முயன்றதாகத் தெரிகிறது. இதற்கிடையே, சேலம் மாவட்டம் மகுடஞ்சாவடி வீரபாண்டி ரெயில் நிலையங்களுக்கு இடைப்பட்ட பகுதிக்கு நள்ளிரவில் விஜயகுமார் குழந்தையுடன் சென்றார். அப்போது, ஈரோட்டில் இருந்து சேலம் நோக்கிச் சென்ற சரக்கு ரெயில் வந்துகொண்டிருந்தது.

அந்த ரெயில் முன் குழந்தையுடன் பாய்ந்த விஜயகுமார், ரெயிலில் அடிபட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவருடன் சென்ற ஒன்றரை வயது குழந்தை சாய் ரித்விக்கும் உயிரிழந்தது. இதுகுறித்து தகவலறிந்த ரெயில்வே காவலர்கள் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை மேற்கொண்டனர். மேலும், இந்தச் சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்து, இருவரின் உயிரிழப்புக்கான சூழ்நிலைகள் குறித்து தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

# த.வெ.க. ஆட்சி கொடுத்த வாக்குறுதிகளில் அக்கறை செலுத்தவில்லை.

## ஏஜடியுசி மாநில மாநாட்டில் தேசிய செயலாளர் டி.எம்.மூர்த்தி உரை

ஒசூர் அக் 14

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர்,பெங்களூர் பைபாஸ் ரோட்டி உள்ள சிவரஞ்சனி ஹோட்டலில் அமைக்கப்பட தோழர் த.சுந்தர ராஜன் நினைவரங்கத்தில் ஏஐடியுசியின் 21 வது மாநில மாநாடு மூன்று நாட்கள் நடைபெற்றது

இம் மாநாட்டுக்கு காசிவிஸ்வநாதன்,செல்வராஜ் ஆகியோர் தலைமை வகித்தனர் கடந்த 20 வது மாநாட்டு நடைபெற்ற திருநெல்வேலி யிலிருந்து கொண்டுவர பெற்ற 21 மாநாட்டு கொடியை டி.எம்.மூர்த்தி பெற்று கொண்டார்

மாநாட்டு கொடியினை இரவி ஏற்றி வைத்தார் ஏஐடியுசிக்காக தங்கள் வாழ்கையை அர்ப்பணித்த நாமக்கல் மணிவேல் ஜெயராஜ் ஆகியோரின் நினைவு தியாக ஜோதியை எம்.சங்கையா பெற்று கொண்டார் சேலம் பரமசிவம் நினைவு தியாக ஜோதியயை மீனாள் சேதுராமன் பெற்று கொண்டார்.

20 வது மாநாட்டில் இருந்து 21 வது மாநாடு தொடங்கும் இந்நிகழ்வின் இடைப்பட்ட காலத்தில் நம்மோடு பயணித்து மறைந்த தோழர்கள் இரா. நல்லகண்ணு, சுதாகர் ரெட்டி, கானம் ராஜேந்திரன், அதுல்குமார் அஞ்சான், அனந்த சுப்பாராவ், எம். செல்வராசு, எம்.பி த.சுந்தரராஜன், கே.ஜி.ஜெகநாதன், ஜி. கிருஷ்ணன் கே.ஏ. வேணுகோபால், எஸ். மணிவேல், பி. பரமசிவம், ஆர்.வி. நடராஜன், சி. சக்ரபாணி, எஸ்.ஆர். தேவதாஸ் எம். சிங்கமுத்து எம்.எஸ். பாலகிருஷ்ணன் கே.கே.என். ராஜன், கே. ராஜாங்கம் .வி. முருகன் கே.கே.கோவிந்தன் எஸ். ஜெயராமன் கே. முருகன் எஸ். நிக்சன் ஆப்ரஹாம், எஸ். செல்வ முத்துகுமார் என். பாலகிருஷ்ணன் ஆகியோருக்கு புகழ் அஞ்சலியும் தியாகிகள் ஸ்தூபிக்கு மலரஞ் சலியும் செலுத்தப்பட்டது.

தளி சட்டமன்ற உறுப்பினர் இராமச்சந்திரன் அனைவரையும் வரவேற்றார் மாநாட்டை தொடக்கி வைத்து அகில இந்திய பொதுச் செயலாளர் அமர்ஜித் கவுர் உரை நிகழ்த்தினார்.

வாழ்த்துரை

சி.பி.ஐ.மாநிலச் செயலாளர் மு. வீரபாண்டியன்,எல்.பி.எஃப். தலைவர்கி.நடராசன்,ஹச்.எம். எஸ்.மாநில தலைவர் மு. சுப்பிரமணியன் ஏஐசிசிடியு மாநில துணைத் தலைவர் பி .நடராஜன் யூ.டி.யூ.சி மாநிலச் செயலாளர் அ.சேக்கிழார் டாபுள்யு.பி.டி.யூ.சி துணைத்தலைவர் ஆர்.சம்பத் எல்.எல்.எஃப்.அமைப்பாளர் க.பேரறிவாளன் சி.ஐ.டி.யு. மாநிலச் செயலாளர் எஸ்.கண்ணன் ஐ.எ.டி.யூ.சி மூத்த துணைத் தலைகர், முன்னல் சட்ட மன்ற உறுப்பினர் மனோகரன் ஏ.ஐ.யூ.டி யூ.டி மாநில தலைவர், அ.அனவரதன் டி.யூ.சி.சி. மாநில இணைச் செயலாளர் ச.மாயாண்டி எம்.எல்.எஃப் பொதுச் செயலாளர் இரா.அந்திரி தாஸ் பொதுச்செயலாளர் ஏ.ஐ.பி.இ.ஏ சி.ஹச் வெங்கடாச்சலம் ஆகியோர் வாழ்த்துரை நிகழ்த்தினார்

பொதுச்செயலாளர் இராதாகிருஷ்ணன் வேலை அறிக்கை சமர்ப்பித்தார் இவ் அறிக்கையின் மீது 42 தோழர்கள் விவாதத்தில் பங்கேற்றனர் விவாதத்திற்கு பின் தொகுப்புரை பொதுச் செயலாளர் நிகழ்த்திய பின் ஏக மனதாக அறிக்கை ஏற்கப்பட்டது வரவு செலவு அறிக்கையை தணிக்கை குழு சமர்ப்பித்தது அவ்வரிக்கையை ஏக மனதாக ஏற்கப்பட்டது புதிய நிர்வாகிகள் தேர்வில் 129 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர் அவ் நிர்வாகிகளின் தலைவரக: எஸ்.காசி விஸ்வநாதன் துணைத் தலைவர்களாக :கே.சுப்பராயன் எம்.பி ,டி.எம்.மூர்த்தி கே.இரவி நா.பெரியசாமி ExMLA சி.சந்திரகுமார் மீனாள் சேதுராமன் எம்.சங்கையா சி.தங்கவேல் எஸ். மூர்த்தி கே.மணி எம்.கே.மாதையன் வே.நடராஜா H.கிருஷ்ணசாமி பொதுச் செயலாளரக:எம். இராதாகிருஷ்ணன் துணைப் பொதுச் செயலாளர்: ஆ.பாஸ்கர் செயலாளர்களாக: வஹிதா நிஜாம் எம்.ஆறுமுகம் ExMLA ஆர்.ஆறுமுகம் எஸ்.சின்னசாமி ,என்.சேகர் ஆர்.தில்லைவனம்,கே. நடராஜன் வி.ஆதிமூலம்,என். செல்வராஜ் எம்.ஜஹாங்கீர் பொருளாளரக: பி.பீட்டர் துரைராஜ் ஆகியோர் ஏகமனதாக தேர்ந்து எடுக்கப்பட்டனர் புதிய நிர்வாகிகளை வாழ்த்தி தேசிய செயலாளர் சி.ஸ்ரீகுமார் சுப்பராயன் இலகுமையயா ஆகிய புதிய நிர்வாகிகளை வாழ்த்தி உரை நிகழ்த்தினார் மாநாட்டின் இயக்கத் தீர்மானத்தை முன்மொழிந்து தேசிய செயலாளர் டி எம் மூர்த்தி உரை நிகழ்த்திய போது

தொழிலாளர்கள் போராடிப் பெற்ற உரிமைகளை முற்றாகப் பறித்து, நிரந்தரவேலை முறைமையை ஒழித்து, கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும், அந்நிய பகாசுரக் கம்பெனிகளுக்கும் சாதகமான கொள்கைகளை மோடியின் ஒன்றிய அரசு, மிக வேகமாகச் செயல்படுத்தி வருகிறது.

இந்தியாவிலேயே மிக அதிகமான தொழிற்சாலைகளையும், தொழிலாளர்ககளையும் கொண்டுள்ள தமிழ்நாடு, முந்தைய காலத்தில் தொழிலாளர் நலன் பயக்கும் சட்டங்களை இயற்றி செயல்படுத்தியுள்ளது. தொழிலாளி வர்க்கத்தின் இடைவிடாத தொடர்ச்சியான போராட்டங்களை அரசு செவிமடுத்ததால் இது சாத்தியமானது. இதனால் தான் தமிழ் நாடு தொழில் வளர்ச்சியிலும் முதலிடத்தைப் பிடித்தது. ஆனால் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக, அந்நிய முதலீட்டை ஈர்ப்பதாகக் கூறி, கார்ப்பரேட் ஆதரவு நிலைக்கு மாறியது.



திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், 2023ல், எட்டு மணி நேர வேலை என்ற போராடிப் பெற்ற உச்சவரம்பைத் தகர்த்து 12 மணி நேரமும் அதற்கு மேலும் வேலை வாங்கலாம் என்ற சட்டம் நிறைவேற்றப் பட்டது. ஆனால் கடுமையான எதிர்ப்புகளுக்குப் பின் திரும்பப்பெறப்பட்டாலும், தொழிலாளர்களுக்கு விரோதமான செயல்பாடுகள் தொடர்ந்தன.

அரசுத் துறைகள் மற்றும் அரசுடன் தொடர்புடைய உள்ளாட்சி, மருத்துவமனைகள், டாஸ்மாக், ஆவின்,கூட்டுறவு உள்ளிட்ட பல தொழில்களில் நிரந்தர வேலை வாய்ப்பை குறைத்து, வேலைக்கும் ஊதியத்துக்கும் எந்த பாதுகாப்புமற்ற காண்ட்ராக்ட் மற்றும் அவுட்சோர்சிங் முறை செயலுக்கு வந்தது.

குறைந்தபட்ச ஊதியத்தை சட்டவிரோதமாக மிகக்குறைத்து நிர்ணயித்தல், அதனையும் கூட அரசுத்துறைகளே அமுலாக்க மறுத்தல், அரசு போக்குவரத்து தொழிலாளர்கள் ஓய்வு பெற்ற பின்பு, அவர்களுடைய ஓய்வுப் பலன்களை

வழங்காமல் பல ஆண்டுகள் இழுத்தடித்தல், ஆஷா, அங்கன்வாடி உள்ளிட்ட திட்ட ஊழியர்களை தொழிலாளர்களாக ஏற்க மறுத்து, தரை மட்ட சம்பளம் வழங்குதல் என தொடர்ச்சியாகத் தாக்குதல் தொடுத்தது.

"மாநில அரசு தனது தொழிலாளர் கொள்கையை அறிவிக்க வேண்டும்" என்று ஏஐடியுசி போராட வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

ஏஐடியுசி தனித்தும், மற்ற தொழிற்சங்க அமைப்புகளுடன் சேர்ந்து நடத்திய போராட்டங்களை எல்லாம், திமுக அரசு சட்டம் ஒழுங்குப் பிரச்சனையாகவே பார்த்தது.

இத்தகைய போராட்டங்கள் நியாயமான தீர்வை கூட எட்ட முடியாத நிலையில், தீர்வு கிடைக்கும் என நம்பிப் போராடிய தொழிலாளர்கள், திமுக அரசின் மீது நம்பிக்கை இழந்தனர். இது 2026 ஏப்ரல் மாதத்தில் நடந்த சட்டப்பேரவைக்கான தேர்தலிலும் பிரதிபலித்தது.

1967 ஆம் ஆண்டுக்குப் பின், திமுக, அஇஅதிமுக ஆகிய இரண்டு கட்சிகள் மட்டுமே மாறி மாறி ஆட்சிக்கு தேர்வு செய்யப்பட்ட ஒரு இரு துருவ அரசியலை, இந்த சட்டப்பேரவைத் தேர்தல் உடைத்தெறிந்தது.

ஐந்து ஆண்டுகள் பணிபுரிந்த ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்துவோம், அரசுப் பணியாளர்களுக்கான பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் கொண்டு வருவோம், அங்கன்வாடி ஊழியர்களுக்கு ரூ.18,000 தூய்மைப் பணியாளர்களுக்கு பணி நிரந்தரம், 5 லட்சம் இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி, அரசுத்துறையில் 5 லட்சம் புதிய அரசு வேலைகள், வேலை இல்லாத பட்டதாரிகளுக்கு மாதம் ரூ4,000 வரை உதவி தொகை என வாக்குறுதிகள் தந்த த.வெ.க.வுக்கு மக்கள் வாக்களித்து தனிப்பெரும் கட்சியாகக் தேர்வு செய்தனர்.

த.வெ.க. ஒரு வழியாக ஆட்சியமைத்த பின்னர் இந்த வாக்குறுதிகளில் எதைப்பற்றியும் அக்கறை செலுத்தவில்லை.

தொழிலாளர் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளவர், பதவி ஏற்று ஐந்து மாதங்கள் ஆகும் நிலையில், இதுவரை தொழிற்சங்கத் தலைவர்களை ஒரு முறை கூட சந்திக்கவில்லை என்பது அதிர்ச்சியளிக்கிறது.

இது சம்பந்தமாக முதலமைச்சரை நேரில் சந்தித்து தேங்கிக் கிடக்கும்

தொழிலாளர்கள் பிரச்சினைகள் குறித்து தொழிற்சங்கங்களை அழைத்துப் பேசுமாறும், முத்தரப்பு குழுக்களை உடனடியாக அமைக்குமாறும் கோரி, நிலைமைகளை விளக்கி, ஏஐடியுசி கடிதத்தைத் தந்து வேண்டுகோள் விடுக்கப்பட்டது. ஆனால் அரசுத் தரப்பிலிருந்து இதுவரை எந்த அசைவும் இல்லை.

தொழிலாளர் மானியக் கோரிக்கையின் போது, வெளியிடப்பட்ட 15 அம்ச அறிக்கையில், நலவாரியங்களின் நிதியை வீண் செலவு செய்வது பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. அதிலும்கூட கட்டிட, உடலுழைப் புத் தொழிலாளர்கள் நீண்ட காலமாகப் போராடிக் கேட்டு வரும் நிதிப் பயன்களை உயர்த்துவது பற்றி ஒரு சொல்லும் இல்லை.

தமிழ்நாடு முழுமையிலும் உள்ளாட்சித் தொழிலாளர்களை காண்ட்ராக்ட் விடுவதற்கு வேகமான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

டாஸ்மாக் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை அறிவித்த போது, தொகுப்பூதியத்தை உயர்த்தலாம், ஆனால் நிரந்தரம் பற்றி பேசமுடியாது என உறுதியாகக் தெரிவிக்கப்பட்டது.

மின்சார வாரியத்தில், 64,000 பணியிடங்கள் காலியாக இருந்தும், காண்ட்ராக்ட தொழிலாளர்களை பணியமர்த்தினர். மின்வாரியத்தால் குறைந்த முதலீட்டில் நிறுவ முடிந்த ஸ்மார்ட் மீட்டர் பொருத்துதல் தனியாருக்குத் தரப்பட்டுவிட்டது. துணை மின்நிலையங்கள் அமைத்தல், மின் பரிமாற்றம் (டிரான்ஸ்மிஷன்) உள்ளிட்டவை தனியாருக்குத் தரப்படுகின்றன.

போக்குவரத்துக் கழகங்களில், 30,000 நிரந்தரப் பணியிடங்களை நிரப்புவதற்கு பதிலாக, நடத்துநர்களை தினக்கூலிகளாக நியமிக்க உத்திரப் பிரதேச நிறுவனத்துக்கு காண்ட்ராக்ட் தரப்படுகிறது. அரசுக்குச் சொந்தமான மின்சாரப் பேருந்துகளின் பராமரிப்பு, ஓட்டுநர் பணி ஆகியவை தனியாருக்குத் தரப்படுகின்றன. 'அரசு தனியார் பங்கேற்பு' (HHH) முறையில் படிப்படியாக மாநிலப் பொதுத்துறை நிறுவனங்களைத் தனியாரிடம் தருவதற்கு தவெக அரசு முழு முயற்சி எடுத்து வருகிறது.

பணி நிரந்தரம், சம வேலைக்கு சம ஊதியம், பணி பாதுகாப்பு, 2023 24க்கான நிலுவை ஊக்கத்தொகை, மகப்பேறு விடுப்பு உள்ளிட்ட கோரிக்கைகளுடன் போராடிய செவிலியர் பிரதிநிதிகளை பேச்சுவார்த்தைக்கு அழைத்துச் சென்று தலைமைச் செயலகத்தில் கைது செய்தனர். அனுமதி பெற்று உண்ணா விரதமிருந்த இடத்தில் விளக்குகளை அணைத்து குழந்தைகளைக்கூட

அடித்து, பல நூறு பேரைக் கைது செய்தனர்.

உயிர் காக்கும் 108 ஆம்புலன்ஸ் பணியாளர்கள் அவுட்சோர்ஸ் செய்யப்படுவதை எதிர்த்துப் போராடுகின்றனர்.

இவையனைத்தும் வெறும் வேலைவாய்ப்புப் பிரச்சினை மட்டுமே அல்ல. நிரந்தரப் பணியிடத்துடன் வரும் ஊதியம், பதவி உயர்வு, ஓய்வூதியம், சமூகப் பாதுகாப்பு, தொழிற்சங்க உரிமை ஆகியவை ஒப்பந்த முறையில் முற்றாகப் பறிக்கப்படும்.

திமுக அரசு நிறுத்தி வைத்திருந்த, தொழிலாளர்களுக்கு விரோதமான மூன்று தொழிலாளர் சட்ட தொகுப்புகளுக்கான மாநில விதிகள் பற்றி, கண்துடைப்புக்கு ஒரு கலந்தாலோசனைக்கூட்டத்தை நடத்தி விட்டு, த.வெ.க. அரசு வெகு விரைவில் புதிய சட்டத் தொகுப்புக்கான விதிகளை அறிவிக்கை செய்ய இருக்கிறது.

த.வெ.க.வின் தேர்தல் கால வாக்குறுதிகளுக்கு நேர் எதிரான திசையில் அதன் அரசு பயணிக்கிறது. தொழிலாளர்களுக்கு வேண்டியது உறுதிமொழி அல்ல; உரிமை. தொழிலாளியின் உழைப்பை நிரந்தரமாகப் பயன்படுத்திக்கொண்டு, அவரது வேலையை மட்டும் நிரந்தரமற்ற தாக்க முடியாது.

தெருவோர வியாபார சட்டத்துக்கு எதிராக, பெரிய கடை முதலாளிகளின் நிர்ப்பந்தத்துக்கு இணங்கி தமிழ்நாடு முழுவதும் தெருவோர வியாபாரிகளை ஈவிரக்கமின்றி அகற்றி வருகிறது. கடலையே வாழ்வாதாரமாகக் கொண்டு பட்டினப்பாக்ககி வாழ்க்கை நடத்தும் மீனவர்களை அகற்றி விட்டு பட்டினப்பாக்கத்தில் தலைமைச் செயலகம் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கிறது.

கோரிக்கைகளை முன்வைத்துப் போராடும் தொழிலாளர்களைக் கைது செய்வது, மிரட்டுவது போன்ற நடவடிக்கைகளில் காவல்துறையை ஈடுபடுத்துவது போன்ற போராடும் உரிமையை மறுக்கிற சட்டவிரோத நடவடிக்கை, கடுமையான கண்டனத்துக் குரியதாகும் என்று உரை நிகழ்தி 2026, அக்டோபர் 31ம் தேதியன்று மாவட்டத் தலைநகர்கள், தொழில்மையங்களில் ஆர்ப்பாட்டம் நடத்துவதென்றும்,

2026, டிசம்பர் 13 முதல் 20ம் தேதி வரை, அனைத்து மாவட்டங்களிலும், ஏஐடியுசியுடன் இணைக்கப்பட்ட சங்கங்கள் அனைத்தும் இணைந்து, தொழிலாளர்கள், பொதுமக்கள் மத்தியில் விரிவான பரப்புரை இயக்கத்தை நடத்துவது உட்பட மூப்பதுக்கும் மேற்பட்ட தீர்மானங்களை முன்மொழிந்தார் அனைத்து தீர்மானங்களும் ஏக மனதாக நிறைவேறியது முன்னதாக கலைமாமணி டாக்டர் சித்தன் தெ.ஜெயமூர்த்தி குழுவினர் மக்கள் இசைப் பாடல்கள் கலை நிகழ்ச்சி நடைபெற்றது அனைவருக்கும்

மாதையன் நன்றி கூரினார்

மாலை

3.00 அளவில் தளிசாலை, மாநகராட்சி பூங்கா வேளாண்கண்ணி பள்ளி அருகிலிருந்து தொழிலாளர் பேரணி தொடங்கி இராம்நகரில் அமைக்கப்பட்ட தோழர் ஆர். நல்லக்கண்ணு திடலில்

பேரணி நிறைவு பெற்று பொதுக்கூட்டம் நடைபெற்றது





கோவை மாநகராட்சி மாமன்ற கூட்டம், மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன் தலைமையில், மாநகராட்சி ஆணையாளர் கட்டா ரவி தேஜா முன்னிலையில் இன்று காலை தொடங்கி நடைபெற்று வருகிறது. கோவை மாநகராட்சியின் விக்டோரியா ஹாலில் நடைபெற்று வரும் இந்தக் கூட்டத்தில், மாநகராட்சியின் மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளனர். முன்னதாக கோவை மாநகர் 44வது வார்டு உறுப்பினர் காயத்ரி (காங்கிரஸ் கட்சி) கோவை மாநகர மேயரை கண்டித்து மாநகராட்சி வளாகத்தில் மேயர் வரும் வழியில் தரையில் அமர்ந்து தர்ணாவில் ஈடுபட்டார். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது

### மாநில அளவிலான தென் மண்டல பழங்குடியினர் பள்ளிகளுக்கான வாலிபால் போட்டி..

# ஈரோடு மாவட்டம் தாளவாடியில் நடைபெற்ற போட்டியில் ஈரோடு தயா அறக்கட்டளை மாணவர்கள் சாம்பியன்..

ஈரோடு. அக். 14

ஈரோடு மாவட்டம் தாளவாடியில் நடைபெற்ற மாநில அளவிலான பழங்குடியினர் மாணவர் பள்ளிகளுக்கு இடையேயான வாலிபால் போட்டியில் ஈரோடு தயா அறக் கட்டளை மாணவர்கள் சாம்பியன் பட்டம் வென்றனர்.

ஈரோடு மாவட்டம் தாளவாடியில் தென் மண்டலங்களுக்கு இடையே ஆன மாநில அளவிலான, பழங்குடியினர் இன பள்ளி மாணவர்களுக்கு இடையே வாலிபால் போட்டி நடைபெற்றது.

இதில் தமிழ்நாடு டீம், கர்நாடகா சாம்ராஜ்நகர் டீம் என பல வாலிபால் குழுக்கள் போட்டியில் பங்கேற்றன.

இந்த வாலிபால் போட்டியின் முடிவில் தமிழ்நாடு அணி முதலிடம் பிடித்தது.




மேலும் கர்நாடக மாநில சாம்ராஜ்நகர் ஆணையினர் இரண்டாவது இடம் பிடித்தனர்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த அணியினர் முதல் மற்றும் மூன்று, நான்கு இடங்களையும் பிடித்து சாம்பியன் பட்டம் வென்றனர்.

இந்த விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற தமிழ்நாடு மாணவர்களுக்கு ஈரோடு தயா அறக் கட்டளையின் சார்பில் விளையாட்டுக்கான உபகரணங்கள் மற்றும் சிறந்த பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

மேலும் போட்டிற் கான ஏற்பாடுகளை ஈரோடு தயா அறக்கட்டளையின் நிறுவனத் தலைவர் டாக்டர என். எம் பிரதீப் மற்றும் விளையாட்டு துறையை சார்ந்த நிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தனர்.

## உள்ளாட்சித் தேர்தலில் வீ த லீடர்ஸ் அமைப்பு போட்டியிடும்: அண்ணாமலை அறிவிப்பு

சென்னை: அக்.14–

உள்ளாட்சித் தேர்தலில் வீ த லீடர்ஸ் அமைப்பு போட்டியிடும் என்று அண்ணாமலை அறிவித்துள்ளார். மன்னார்குடி அருகே சோழபாண்டியில் 15,000 மரக்கன்றுகளை நடும்பணியை தொடங்கி வைத்த பின் 234 தொகுதிகளிலும் நாம் தலைவர்களை உருவாக்க வேண்டும் என்று அறிவித்துள்ளார். சட்டமன்ற தேர்தலில் மன்னார்குடி, தாராபுரத்தில் வீதி வீதியாக சென்று வாக்கு சேகரித்தேன் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421, 9750589992